<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**<u>02.12.2025</u>**

OS. No.237/2009

பக்கம் – 3

DW1 – ஜெகன்நாதன்

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்துக்கள் வாதியில் வரதப்பிள்ளைக்கு பாதிக்கப்பட்டது என்றால் சரிதான். வரத பிள்ளை என்னுடைய தந்தை குப்பு பிள்ளை மற்றும் சேஷாத்திரி ஆகியோர் ஒன்றாகத்தான் இருந்தனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 என்னுடைய தந்தை ஏற்படுத்திக் கொடுத்தது தான் என்றால் சரிதான். வரதப்பிள்ளை உயில் ஆவணம் அல்லது செட்டில்மென்ட் ஆவணம் எதுவும் ஏற்படுத்தி உள்ளாரா என்றால் இல்லை. வரதப்பிள்ளை, குப்புப்பிள்ளை மற்றும் சேஷாத்திரி ஆகியோர் கூர்ச்சீட்டின்படி தான் சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கில் என்னுடைய எதிர்ருரையை தாக்கல் செய்வதற்கு என்னுடைய வழக்கறிஞரிடம் நான்தான் விபரங்களை சொன்னேன். என்னுடைய எதிருரையில் 05.09.1986 அன்று ஒரு பாகப்பிரிவினை நடைபெற்றதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த விபரத்தை என்னுடைய தந்தை சொல்லி நான் தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணத்தை என்னுடைய தந்தை எனக்கு ஏற்படுத்தி கொடுத்ததை அந்த சொத்து வரதப் பிள்ளைக்கு பாதிக்கப்பட்டதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து விவசாய பூமி என்றால் சரிதான். விவசாய நிலத்தில் நான் பயிர் வைத்து வருவதை காட்ட ஏதாவது ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை ஆனால் என்னிடம் உள்ளது. என்னுடைய தந்தை அவருக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து தாவா சொத்தில் உள்ள விவசாய நிலங்களில் பயிர் வைத்து வருகின்றார். வரதப்பிள்ளை உயிருடன் இருந்த பொழுதும் என்னுடைய தந்தை தான் பயிர் வைத்து வந்தார். சாகுபடி அடங்கல் வரதப்பிள்ளையின்

பெயரில்தான் உள்ளது என்னுடைய தந்தையின் பெயரை இல்லை. வருவாய் துறை நிறுவனம் சாகுபடி இடங்களில் என்னுடைய தந்தையின் பெயரை மாற்ற மனு எதுவும் கொடுத்தாரா என்றால் அது குறித்த விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் என்னுடைய தந்தையின் அனுபவத்தில் இருந்து வந்ததை காட்டவும் அதனை மூன்றாம் நபர்களுக்கு தெரியப்படுத்தவும் சேஷாத்திரிக்கு இது தொடர்பாக கடிதம் எதுவும் எழுதியுள்ளாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணம் 2009 ஆம் ஆண்டு என்னுடைய பெயரில் என்னுடைய தந்தை வரதப் பிள்ளை ஏற்படுவதற்கு முன்னர் சொத்து குறித்து அடமான பத்திரம் அல்லது வேறு ஏதாவது பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதுவும் ஏற்படுத்தினாரா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 நத்தம் பட்டா தாவா சொத்தில் உள்ள வீட்டு மனைக்கு உரியதாகும். பி.வா.சா.ஆ.1 என்னுடைய பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்படுவதற்கு முன்பாக என்னுடைய தந்தையின் பெயரில் இருந்தது அதற்கு முன்னர் யார் பெயரில் இருந்தது என்றால் அதற்கு முன்னர் பட்டா யார் பெயரிலும் வழங்கப்படவில்லை. என்னுடைய தாத்தா வரத பிள்ளை 1991 ஆம் ஆண்டு காலமானார். பி.வா.சா.ஆ.1 1995 ஆம் ஆண்டு தான் என்னுடைய தந்தை பெற்றார். இந்த ஆவணத்தை என்னுடைய தந்தை அவருடைய பெயரில் பெறுவதற்கு என்னென்ன ஆவணங்களை கொடுத்தார் என்றால் அனுபவத்தின் அடிப்படையில் தான் அது வழங்கப்பட்டது. பி.வா.சா.ஆ.6 மின் பயனிட்டு கட்டண ரசீதுகள் 2019 ஆம் ஆண்டில் இருந்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு முந்தைய வருடங்களுக்கானதையும் தாக்கல் செய்துள்ளேன் . எந்த வருடத்தில் இருந்து சொத்துக்களுக்கு என்னுடைய தந்தை வரி செலுத்தி வருகின்றார் என்ற விபரம் எனக்கு தற்போது நினைவில்லை. வீட்டிற்கு வரி விதித்து வரப்பட்டுள்ளது 1998 ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் வரி செலுத்தி

வருகின்றோம். பி.வா.சா.ஆ.4 ஆவணம் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் 2025 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டதற்கான வரி ரசீது மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதற்கு முந்தைய வருடங்களுக்கு உரியதும் 1998 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டு வந்ததற்கான ரசீதுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஆனால் என்னிடம் உள்ளது. எவ்வாறு தாக்கல் செய்யாததற்கான காரணம் என்னவென்றால் இணையவழி மூலமாக சொத்து வரி செலுத்தலாம் என்ற பட்சத்தில் அதற்குரிய ஆவணத்தை மட்டும் தான் தற்பொழுது வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். இதற்கு முன்னர் சொத்து வரிகளை செலுத்தியதற்காக அதற்குரிய அட்டை தனியாக என்னிடம் உள்ளது. தாவா சொத்தில் உள்ள வீட்டுமனையில் 1992 ஆம் ஆண்டு ஓட்டு வீடு முதலில் கட்டினோம். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1995 ஆம் ஆண்டு அது வழங்கப்பட்டதில் வெறும் மனை என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதில் வீடு ஏதும் உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதில் தவறாக அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. வீட்டின் இடம் மூன்று சென்ட் இடமாகும். தாவா சொத்தான வீட்டுமனையில் அனுபவத்தில் இருந்து வருவதை காட்ட என்ன ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வரி ரசீதினை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தந்தை தாவா சொத்து அமைந்துள்ள ஊரிலேயே தான் இருந்தார் என்றும் சேஷாத்திரி வெளியூருக்கு வேலைக்காக சென்றுவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய தந்தை தமிழில் தான் கையெழுத்து செய்வார். என்னுடைய தந்தையின் கையெழுத்து எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய தந்தையுடையதுதான். என்னுடைய தாத்தாவின் காலத்திற்குப் பிறகு என்னுடைய தந்தைக்கும் சேஷாத்திரிக்கும் தனித்தனியாக சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல.

எங்களுடைய சொத்துக்கள் அனைத்தும் என்னுடைய தாத்தா வரதப்பிள்ளையுடையதுதான். என்னுடைய தாத்தா வரத பிள்ளைக்கு 1 ஏக்கர் 96 செண்ட் இடம் உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய தாத்தாவின் சொத்து தான் என்னுடைய தந்தை குப்புப்பிள்ளைக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். என்னுடைய தாத்தா வரதப்பிள்ளை என்னுடைய தந்தை குப்புப்பிள்ளைக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் ஏதோ சொத்துக்களை மாற்றம் செய்து கொடுத்தாரா என்றால் இல்லை. என்னுடைய தந்தை என்ன படித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய தந்தை குப்பப்பிள்ளை எங்களது ஊரில் உள்ள எங்களது சொத்துக்களை பெயர் குறிப்பிட்டு எதுவும் அழைக்க மாட்டார். கோவிந்தம்மாள் என்னுடைய அத்தை ஆவார். என்னுடைய அத்தை என்னுடைய தாத்தா வரதப்பிள்ளையின் சொத்துக்கள் குறித்து அவருக்கு வேண்டாம் என்று விடுதலை பத்திரம் ஏதாவது என்னுடைய தந்தையின் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்து என்னுடைய தாத்தா வரத பிள்ளைக்கு பாதிக்கப்பட்டது என்றும் அதனால் அவருடைய ஒரு வாரிசான சேஷாத்திரிக்கும் அதில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

(எட்டாம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது )

Sd/- K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்